செய்தி வெளியீடு எண். 440 நாள். **29.5.2010**

# செய்தி வெளியீடு

## கை கால் பாதிக்கப்பட்ட 72 மாற்றுத் திறனாளிகளுக்கு விதிகளைத் தளர்த்தி தொடக்கப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர் பணி நியமனம்! மாற்றுத் திறனாளிகளுக்கு உறுதிமொழி அளித்தபடி

## முதலமைச்சர் கலைஞர் உடனடியாக ஆணை பிறப்பித்தார்!

**பூவிருந்தவல்லி சிறப்பு ஆசிரியர் பயிற்சி மையத்தில் 2005–2006 ஆம் ஆண்டு முதல் 2008–2009 வரையுள்ள காலத்தில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்து பணி நியமனம் கிடைக்காமல் உள்ள மாற்றுத் திறனாளிகள் 72 பேர் தங்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் எனக் கூறி உண்ணாவிரதம் இருந்தனர். அவர்களில் சிலர் நலிவுற்று சென்னை அரசுப் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தனர். இது குறித்த தகவலை நேற்று வெள்ளிக் கிழமை காலையில் செய்தி ஏடுகள் வாயிலாக அறிந்து மிகவும் வேதனையுற்ற முதலமைச்சர் கலைஞர் அவர்கள், காலை உணவு கூட உட்கொள்ளாமல் உடனடியாக அரசுப் பொது மருத்துவமனைக்குச் சென்று, உண்ணாவிரதம் இருந்த கை கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளைச் சந்தித்து அவர்களின் கோரிக்கையை ஒருவார காலத்தில் நிறைவேற்றுவதாக அவர்களிடம் உறுதி அளித்தார்கள். அதனை தொடர்ந்து அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து தங்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டு வீடு திரும்பினார்கள்.**

**முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் வாக்குறுதி அளித்த அன்றே, அதாவது, 28.5.2010 அன்றே ஆணையிட்டார்கள். அதன்படி 2005–2006 முதல் 2008–2009 வரையிலான காலத்தில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்த கை, கால் பாதிப்படைந்த மாற்றுத் திறனாளிகள் 72 பேருக்கும் பள்ளிக் கல்வித்துறையில் உள்ள தொடக்கப் பள்ளிகளில் விதிகளைத் தளர்த்தி இடைநிலை ஆசிரியர்களாகப் பணி நியமனம் வழங்கிட அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,தலைமைச் செயலகம், சென்னை–9..